மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையிலுள்ள போக்குவரத்து மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகிய இவ்விரு பிரிவினருக்கும் பொருந்தக் கூடிய ஒரு படித்தான ஊக்க போனஸ் அளிக்கும் திட்டத்திற்கான செயற் குறிப்பு ஒன்று துறையின் ஆய்விலுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் தொழிலாளருக்கு இந்தக் காலம் வரலாற்றிலே 35 லட்சம் ரூபாய் போனஸ் தரப்பட்டு அவர்கள் மேலும் ஊக்கத்துடன் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் அவர்களிடத்தில் வேலை வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டுமென்றும் ஒரு திட்டத்தை வெகு வேகமாக அமுல்படுத்துவதற்கு முயல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தொழிலாளர்கள் ஊக்கத்தோடு பணியாற்றுகிறார்கள். அது உண்மை. அவர்களுக்கு மேலும் ஊக்கத்தை ஊட்டுகின்ற வகையிலும் பூரிப்பூதிய திட்டத்தை தரவேண்டும் என்பதற்கு அரசு பல்வேறு திட்டங்களை ஆராய்ந்து வருகிறது. தொழிற்சங்க தலைவர்களும் ஏதேனும் திட்டங்கள் கொண்டுவருவார்களேயானால் அதைப் பற்றி பரிசீலிப்போம் என்று தொழிற்சங்க தலைவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, தனியார் பேருந்துகளைவிட அரசு பேருந்துகளில் கட்டணம் அதிகமாக இருப்பதால் நீலகிரி மாவட்டத்தில் அரசு பேருந்துகள் காலியாகவே ஓடுவது அரசுக்குத் தெரியுமா ? இதை தனியார் பேருந்துகள் போல் குறைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கட்டண விகிதத்தைப் பொறுத்த வரை தனியார் பேருந்துகள், அரசு பேருந்துகள் ஒரே கட்டணத்தை வசூலிக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆகவே எந்தத் தனியார் பேருந்துகளாவது குறைவாகக் கட்டணம் வசூலிப்பார்களேயானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அந்தத் தனியார் பஸ்களின் மீது அரசு நடவடிக்கை எடுக்கும். இப்போது வருமானம் குறையாது, அரசாங்க பேருந்துகளுக்கு கிடைக்கின்றது.

மீனாட்சி அம்மன் கோவில்

* 209 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் காலி இடம் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அந்த இடத்தில் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் குறிப்பு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றியுள்ள காலி இடத்தைப் பயன்படுத்த என்ன திட்டம் மேற்கொள்ளப் படும் என்று கேட்க விரும்புகிறேன்.

1972 சனவரி 31]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மதுரை மீனுட்சி அம்மன் கோவில் சுற்றியுள்ள காலி இடத்தை ஒரு பூந்தோட்டம் ஆக்கவும், காலி இடங்களில் கடைகள் அமைக்கவும், ஒரு திட்டம் பரிசிலனையில் இருக்கிறது. ஏனென்றல் கடைகள் அந்த இடத்தில் உள்ள சிற்பங்களை மூடிவிடுகின்றன. அந்தக் கடைகளை வெளியே வைத்தால் ஒரு வகையில் கோவிலுக்கு வருமானம் வருகிறது. மற்ருெரு பக்கத்தில் கோவிலைப் பாதுகாக்கும் வகையில் கோயிலைச் சுற்றிலும் கடைகள் கட்டுவது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, மதுரை மீனுட்சி அம்மன் கோவில் தென் இந்தியாவிலேயே புராதன கோவில் என்று தெரிந்திருந்தும் அரசு அதைச் சுற்றியுள்ள அநேக பாகங்களில் பூந்தோட்டங்கள் ஆக மாற்றுவது பெரிய புனிதத் தன்மையை (ஸாங்க்டிடி) பாதிக்கும் வகையில் இருப்பதால் இந்தக் கொள்கையை அரசு கைவிட முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோவிலுக்குள்ளே கடைகளை வைக்காது வெளியே வைக்கும் காரணத்தால் கோவிலின் புனிதத்தன்மை எந்த வகையிலும் கெடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில் தேர்கள் கட்ட பயிற்சி

* 210 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவில்களில் திருத்தேர்கள் செய்வதற்கான பயிற்சிப் பள்ளிகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) ஒற்றிவைப்புத் தீர்மானம்

போலீஸ் காவலில் மருத்துவ மனையில் இருந்த தொழிலாளர் தலைவர்கள் சிலரை மத்திய அமைச்சர் திரு. கே. ஆர். கணேஷ் சென்று பார்த்ததாகச் சொல்லப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. எ. வகாப் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோருகிறேன் என்ற ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

" 28-1-72-ஆம் நாளன்று ஆவடி டாங்கி தொழிற்சாலை முன்னல் நடந்த கலகத்தின் விளைவாகப் போலீசாரும் தொழிலாளர்களும் காயமடைந்ததாகவும் கலகம் விளைவித்த தொழிலாளர் தலைவர்கள் திரு. குசேலர், திரு. சிந்தன்